# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.197/2023

Deposition of witness – PW-5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்வராஜ் | Caste | : | |
| S/o. | : | தங்கவேல் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed on 09.06.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் தற்போது ஊனத்தூர் கிழக்கு தெருவில் குடியிருக்கிறேன். எனக்கு வழக்கு தொடர்பாக எந்த விவரமும் தெரியாது. போலிசார் வழக்கு தொடர்பாக விசாரிக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த ஆவணத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக கருதப்பட்டு அவரை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. )**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார் என்றும் 04.06.2020ம் தேதி அன்று ஆய்வாளர் என் முன்னிலையிலும் மணியன் என்பவர் முன்னிலையிலும் மாதிரி வரைபடம், மற்றும் பார்வை மகசர் தயார் செய்தார் என்றும், அந்த பார்வை மகசரில் நானும் மணியனும் கையொப்பம் செய்தோம் என்றும் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. ஆஜரில் உள்ள எதிரி எனது ஊரை சார்ந்தவர்தான். எதிரி உள்ளூர்க்காரர் என்ற காரணத்தால் அவர் கேட்டுக்கொண்டதால் உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன் என்றால் சரியல்ல. வழக்கு பற்றிய சம்பவத்தையும் அதற்கான காரணத்தையும் காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தபோது சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி உள்ளூர்க்காரர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.06.09 21:01:11 +0530

Principal Sessions Judge,
Salem.